# அண்ணா பல்கலைக்கழகம் : எம்.ஐ.டி வளாகம்
# சென்னை-600 044

**டாக்டர்.த. தியாகராஜன்**
**புலமுதல்வர்**

**க.எண்: அலுவலகம்/S2/** ராகிங் **/2019** **நாள்: 02.04.2019**

அன்புடையீர்,

பொருள் :உங்கள் பிள்ளை "ராகிங்" செய்யாமல் இருக்க - தங்கள் உதவி கேட்டல்.

******

தங்களது பிள்ளை அண்ணா பல்கலைக்கழகத்தின் எம்.ஐ.டியில் ஒரு மாணவராக/மாணவியாக இருப்பது குறித்து தாங்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவீர்கள் என்பதில் ஐயமில்லை. கல்வி மற்றும் இதர கல்லூரி நடவடிக்கைகளில் அவரது செயல்பாடு குறித்து தாங்கள் தொடர்ந்து கண்காணித்து வந்திருப்பீர்கள் என நம்புகிறேன். இப்பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித் தரமும், ஒழுக்கமும் நம் நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பெருமைக்குரிய வகையில் அறியப்பட்டுள்ளன. இதற்கு காரணம் இக்கல்வி நிறுவனத்தின் கற்பதற்கென்று அமைந்துள்ள அமைதி நிறைந்த மேலும் ஊக்கமிகுந்த ஆசிரியர்களின் கற்பிக்கும் திறமையுமேயாகும். ஒரு கல்வி நிறுவனம் என்ற வகையில் சுறுசுறுப்பாகவும், அதே சமயம் அமைதியின் உறைவிடமாகவும் விளங்க எவ்வித இடையூறும், தடையுமின்றி கல்வியில் முன்னேறும் வாய்ப்புகளை இவ்வளாகம் பெற்றிருக்கிறது. இந்த வளாகம் மாணவர்கள் கல்வியில் மேம்பாடு அடைய உகந்த கோவிலாகத் திகழ்கிறது.

இத்தகைய ஒழுங்கும், அமைதியும் கெடுமாறு செய்யப்படுகிற எந்த ஒரு செயலும் கல்வி கற்கும் சூழலைக் கெடுப்பதுடன் சமூகத்தில் இவ்வளாகத்தின் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் மேலுள்ள நல் நம்பிக்கையையும் கெடுத்துவிடும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். மேலும், மாணவர்களும், பெற்றோர்களும் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகிகளும் அடைகிற சொல்லொணாத் துயரத்திற்குக் காரணமாக அமையும் "ராகிங்" ஆரோக்கியமற்ற மற்றும் விரும்பத்தகாத ஒரு செயல் என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என எண்ணுகிறேன். ராகிங் என்ற பெயரால் நடத்தப்படும் இத்தகைய மனித பண்பற்ற செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக அத்தகு செயல்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு கல்லூரியை விட்டு நீக்குதல், விடுதியிலிருந்து வெளியேற்றுதல், கடுமையான அபராதம் விதித்தல் போன்ற தண்டனைகள் வழங்கப்படும். மேலும், **தமிழ்நாடு ராகிங் தடுப்பு சட்டம்-1997ன் படி ராகிங் செய்த மாணவருக்கு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனையும் ரூபாய் பத்தாயிரம் (ரூ.10,000/-) அபராதமும் விதிக்கப்படும்.** மேலும் அந்த மாணவர் கல்லூரியிலிருந்து விலக்கப்படுவார். மற்ற எந்தக் கல்லூரியிலும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார். இது குறித்து எங்களது அக்கறையை உணர்ந்து எங்கள் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவும், ஒத்துழைப்பும் நல்குவீர்கள் என நம்புகிறேன். தங்கள் பிள்ளைகள் இத்தகு விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடாதிருக்க தகுந்த முறையில் அறிவுரைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இது குறித்து தங்களின் ஆலோசனைகளை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். தயவு செய்து இக்கடிதம் பெற்றமைக்குரிய ஒப்புதலை இத்துடன் அனுப்பியுள்ள **உறுதிமொழி கடிதத்தை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு மாணவர்களின் தத்தம் துறைப்பிரிவு ஆலோசகரிடம் (Faculty Advisor) சமர்பிக்குமாறு வேண்டுகிறேன்.**

தங்களது பதிலையும், ஒரு நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் உங்களுடைய ஒத்துழைப்பையும் எதிர் நோக்குகிறேன்.

தங்களது உறுதிமொழிக் கடிதம் கிடைத்த பின்னரே தங்களது பிள்ளை வகுப்புக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்.

நம்முடைய மக்களின் நலனில் நாம் அக்கறை காட்டுவது மிகவும் இன்றியமையாதது.

வாழ்த்துக்களுடன்

தங்கள் அன்புள்ள

2/4/19

**(டாக்டர்.த. தியாகராஜன்)**

# அண்ணா பல்கலைக்கழகம்
# எம்.ஐ.டி வளாகம் : சென்னை-600 044

## உறுதிமொழிக் கடிதம்

பெறுநர்:

புல முதல்வர்
எம்.ஐ.டி. வளாகம்
அண்ணா பல்கலைக்கழகம்
குரோம்பேட்டை
சென்னை 600 044.

ஐயா,

ஒழுங்கற்ற செயல்களில் ஈடுபடும் மாணவர்/மாணவியர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் கடிதம் மூலம் நான் அறிகிறேன். மேலும் தமிழ்நாடு "ராகிங்" தடுப்பு சட்டம், 1997-ன் படி "ராகிங்" செய்த மாணவர்/மாணவியர்களுக்கு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனையும் ரூபாய் பத்தாயிரம் அபராதமும் விதிக்கப்படும் என்பதையும் மேலும், அந்த மாணவர்/மாணவியர் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார் என்றும், எந்த கல்லூரியிலும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார் என்பதையும் தங்களின் கடிதத்தின் மூலம் நான் அறிந்துகொண்டேன்.

உயர்கல்வி நிறுவனங்களில் ராகிங் அபாயத்தைக் கட்டுப்படுத்த AICTEன் அறிக்கை F. No.37-3/Legal/AICTE/2009, நாள் 1, ஜுலை 2009ஐ (AICTEன் வலைதளம் aicte-india.orgல் காணலாம்) நான் அறிவேன்.

நான் பி.டெக் / பி.ஈ ______________________ துறையில் ________ பருவத்தில் (semester) படிக்கும் என் மகன் /மகள்/பாதுகாப்பிலுள்ள (பெயர்) ______________________ யிடம் இதுபற்றி எச்சரித்துள்ளேன். மேலும் ராகிங் செய்வதால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி அறிவுரைகளை வழங்கியுள்ளேன். என் பிள்ளை "ராகிங்" போன்ற எத்தகைய தடை செய்யப்பட்ட அல்லது விரும்பத்தகாத செயல்களிலும் ஈடுபடமாட்டார் என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன். மேலும் என் பிள்ளை ராகிங் போன்ற விரும்பத்தகாத செயல்களை செய்தமைக்காக தண்டிக்கப்பட்டால் நான் தண்டனையை குறைப்பதற்காகவோ அல்லது நீக்குவதற்காகவோ எந்தவித விண்ணப்பமும் செய்யமாட்டேன் என்றும் உறுதி அளிக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம்

மாணவன் / மாணவி கையொப்பம்:

பெயர் :

பதிவு எண் :

பாடப்பிரிவு :

இடம் :

நாள் :

# ANNA UNIVERSITY
# MIT CAMPUS
CHROMEPET : CHENNAI 600 044

☎ 22232403 : Fax 091-044-22232403

**Dr. T.THYAGARAJAN**


Ref. No. Office/S2/2019/Ragging Dated: 02.04.2019

Sub: Non-participation in ragging by your ward – Regarding.

<><><>

Greetings to you,

I am sure that you feel proud about the fact that your ward is a student of M.I.T. Campus of Anna University, Chromepet. I trust you have been monitoring his/her academic performance and extra curricular activities. The academic standards, the caliber and the discipline of students of this campus and the University are well known throughout our country and abroad. This has been largely possible because of the peaceful ambience and the conducive climate provided by the very good band of motivated and dedicated staff. This campus has always remained calm and quiet, as a temple of learning, always endeavoring for academic excellence.

I am sure any incident which may disturb the general discipline and tranquility will not only affect the academic atmosphere but also shatter the confidence that the society has reposed in us. The unhealthy and barbarous practice of ragging the juniors, may cause hardship to the students, parents and to the authorities of the campus and the University. In order to put an end to this undesirable practice, severe punishments such as suspension from college, expulsion from the hostel, fine etc. depending on the kind of offence, shall be inflicted to the students who involve in ragging.

Anna University is guided by the Tamil Nadu Prohibition of Ragging act, 1997. As such, **any student who indulges in ragging shall be punishable with imprisonment for a term, which may extend to two years and shall be liable to a fine, which may extend to ten thousand rupees(₹ 10,000/-)**. Further, the convicted student shall be dismissed from the institution and shall not be admitted in any other institution.

I am sure that you would appreciate our concern in this regard and render all support in curbing this unhealthy and unwanted practice. Please do advise your ward against participation in such an undesirable and barbarous activity.

I will be happy to receive any suggestion that you would like to make in this regard. **It is mandatory that you acknowledge the receipt of this communication by way of signing the undertaking and returning the same through your son/daughter for being handed over to the Faculty Advisor at the time of enrolment.** I look forward to the pleasure of hearing that your ward is a civilized and educated person.

Kindly note that, your ward will be allowed to attend the classes only on receipt of the declaration from you.

Let us care for the future of our children.

With best wishes,

Yours faithfully,

2/4/19

(Dr.T. THYAGARAJAN)

# ANNA UNIVERSITY : MIT CAMPUS
# CHROMEPET : CHENNAI 600 044

## LETTER OF UNDERTAKING

To

The Dean
Madras Institute of Technology Campus,
Anna University,
Chromepet
Chennai-600 044.

Sir,

I am aware of the fact that stringent punishment had been given against those who indulged in teasing and ragging activities in the previous years. I am also aware that this year also MIT Campus, Anna University, Chennai will be guided by the Tamil Nadu Prohibition of Ragging Act, 1997. As such, any student who indulges in ragging shall be punished with imprisonment for a term, which may extend to TWO YEARS and shall also be liable for a fine, which may extend to TEN THOUSAND RUPEES. The convicted student shall also be DISMISSED from the Institution and SHALL NOT BE ADMITTED IN ANY OTHER INSTITUTION.

I am also aware of the AICTE Notification F.No. 37-3/Legal/AICTE/2009, dated July 1, 2009 (available on AICTE Web Portal aicte-india.org) on curbing the menace of ragging in Higher Educational Institutions.

I have spoken to my son / daughter (Mr./Ms.) ................................................................ B.Tech. / B.E. .............................., Semester .................. about the serious consequences of indulgence in ragging and have strongly advised him / her against this barbarous practice. I assure you that my ward will not indulge in any of the activities forbidden or considered to be undesirable by the authorities. I also state that I will not make any appeal to the authorities to reduce or cancel the punishments in case my ward is PUNISHED because of his / her indulgence in RAGGING / UNDESIRABLE ACTIVITIES.

Yours faithfully,

PARENT / GUARDIAN

SIGNATURE OF THE STUDENT

NAME :

ROLL NO. :

BRANCH :

PLACE :

DATE :